**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுகள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படா-திருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மழமையு மூலதன நிதியேற்பாட்டின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட | இந்த வழுவுக்குரிய திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் | மிகையறவீடு மற்றும் மூலதன செலவினத்தை சரியாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத்திற்கு பதிலாக மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,513,936 ஆன ஆரம்ப செலவினம் நடைமுறை வேலையாக கணக்கு வைப்பதற்கு பதிலாக பயிற்சி செலவினமாக பதிவழிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்தும் நடைமுறை வேலைகள் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படும் என்பது. | நிதிக் கூற்றக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டினுள் தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 382,573 ஆன முற்பண மீதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தினால் அப்பெறுமதியால் முற்பண மீதி அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வழுவுக்குரிய திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்ளப்படும் என்பது. | தீர்ப்பனவு செய்யப்பட்ட முற்பணங்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டினுள் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் போது கழிக்கப்பட்ட ரூபா 382,573 ஆன பிடிகாசு, பிடிகாசு கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக முற்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | இந்த வழுவுக்குரிய திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மேற்கொள்ளப்படும் என்பது. | திருத்தப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 6,155,458 ஆன அட்டுறு செலவினம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு விடயங்கள் தொடர்பில் இணங்குவதுடன் இவ்வாறான வழுவொன்று எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளமை. | அட்டுறுச் செலவினத்தை தீர்ப்பனவு செய்வதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ரூபா 15,506,595 பெறுமதியான பெறவேண்டிய 9 மீதி உருப்படிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது இம்மீதிகளை தீர்ப்பனவு செய்து இறுதிக் கணக்குகளை சமர்ப்பிக்க உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளமை | துரிதமாக அறவிடுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 573,779 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 4,063,873 ஆகும். அதற்கமைய நிதிப்பெறுபேறுகளில் ரூபா 3,490,094 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ் அதிகரிப்பிற்கு ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வகுப்பறைகள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மட்டக்குளிய தலைமை அலுவலகத்தினால் ஐந்து தளங்களையுடைய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் ரூபா 300 மில்லியனான மேலதிக நிதியேற்பாடு ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனை ஆகியவற்றுக்காக ரூபா 6,494,107 செலவிடப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் | நிலவிய நிதி நிலைமை காரணமாக திறைசேரியின் அறிவுரைக்கமைய நிர்மாணத்தை இடைநிறுத்த நேர்ந்துள்ளது. உயர்கல்வி மாணவர் வசதிகளை வழங்குவதற்காக பெறுகை நடைமுறையை பின்பற்றி வரி அடிப்படையில் கட்டிடமொன்றை பெற்றுக் கொள்ள நேர்ந்துள்ளமை. | நாட்டின் அபிவிருத்தி பணிகள் காரணமாக ஈடுபடுத்த வேண்டிய பணத்தை பொருளாதார நலனற்ற பணிகளுக்கு செலவிடப்படக் கூடாததுடன் அரச நிதி ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப் படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியான 2021 திசெம்பர் 29 ஆந் திகதி வரையிலும் குறித்த கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தினால் அதற்கான செலவினம் விளைவற்றதாக இருந்தது. மேலும் அக்கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 2018 ஆம் ஆண்டு முதல் வெளிவாரி தரப்பினர்களிடமிருந்து கட்டிடமொன்றை வாடகைக்கு எடுத்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 96,444,819 கட்டிட வாடகையானவும் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய செலவினமாகவும் ரூபா 13,497,728 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 109,942,547 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 4½ ஏக்கர்கள் பரப்பளவான காணியில் அமைந்துள்ள இலங்கை சமுத்திர பல்கலைக் கழகத்தின் நீர்கொழும்பு பிரதெச மத்திய நிலையத்தில் காணியை சுவீகரிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காணியில் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டம் (SSDP) நிதியத்தின் கீழ் ரூபா 28,843,897 செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு உரிய ஒப்பந்தத்தை நிறைவு செய்த பின்னர் அதன் உதவிப்பணியபாளரினால் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 5 | 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் டயில் பதித்தல் நீங்கலாக ஏனைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது டயல் உற்பத்தி குறைவடைந்துள்ளமையால் டயில் உள்ளதாக ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ளதுடன் டயில் பதிக்கப்பட்ட பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்க முடியும் என்பது. | பிராந்திய மத்திய நிலையத்தின் காணியை சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆரம்ப ஒப்பந்தக்காரரை கொண்டு குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத புதிய ஒப்பந்தக்காரரின் ஊடாக அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் அதில் நிலவிய குறைபாடுகள் ஒப்பந்தக்காரரினால் தீர்க்கப்பட வேண்டுமென பணிப்பாளர (பயிற்சி) மற்றும் பதிவாளர் இற்கு அறிவிக்கப்பட்டிருந்தது, அந்த குறைபாடு உரிய ஒப்பந்தக்காரர் ஊடாக நிவர்த்தி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,571,196 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | நீர்க்கொழும்பு பிராந்திய மத்திய நிலையம் அமைந்துள்ள காணியில் ஒரு பகுதியில் அத்துமீறி வசிக்கும் இரு நபர்களை அகற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் தவறியிருந்தது. | நீர்கொழும்பு பிரதேச செயலாளரினால் அவர்களை அவ்விடத்திலிருந்து நீங்குமாறு எழுத்துமூலம் அறிவித்துள்ள போதிலும் இதுவரையிலும் அவர்கள் அவ்விடத்திலிருந்து அகன்று சென்றிருக்காமை. | அத்துமீறி வசிக்கும் நபர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சமுத்திர பல்கலைக்கழகத்தின் 03 நிலையங்களில் செயற்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 07 பாடநெறிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மட்டக்களப்பு மத்திய நிலையத்தின் பாடநெறிகளை அங்கீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் மட்டக்குளிய பிரதேச மத்திய நிலையத்தின் வேலைத்தளங்கள் நவீனமயப்படுத்தப்பட்ட காரணத்தினால் அங்கீகாரப் பணிகள் தாமதமடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அங்கீகரிக்கும் பணிகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | மட்டக்களப்பு மற்றும் நீர்கொழும்பு பிரதேச மத்திய நிலையங்களில் நடாத்தப்படும் Diploma in aquaculture & Aquatic resource management பாடநெறி மற்றும் மட்டக்களப்பு மத்திய நிலையத்தில் நடாத்தப்படும் Diploma in maritime and logistics management பாடநெறிக்காக 2017 ஆம் ஆண்டின் பிறகு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | பாடநெறிகளுக்கான மேம்படுத்தல் பணிகள் வியாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தங்கல்ல பிராந்திய மத்திய நிலையத்தில் Computer graphic designing பாடநெறிகளுக்காக 2019 ஆம் ஆண்டில் 19 மாணவர்களை பதிவு செய்து அதில் 09 மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்தனர் அப்பாடநெறிகளுக்காக 2019 ஆம் ஆண்டின் பின்னர் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை. | 2019 திசெம்பர் மாதத்தில் 19 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட்-19 வைரஸ் நிலைமை மற்றும் இப்பாடநெறிக்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டமை, ஒரு கணனி ஆய்வுகூடம் மாத்திரம் காணப்பட்ட காரணத்தினால் கணனி ஆய்வுகூடத்தை பயன்படுத்தும் சிக்கல்கள் மாணவர்கள் குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது. | மாணவர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ள பாடநெறிகளை நடாத்துவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | சமுரத்திர பல்கலைக்கழகத்தினால் இலவசமாக நடாத்தப்படும் பட்டங்கள், டிப்ளோமா சான்றிதழ் பத்திர மாணவர்களை இணைத்துக் கொள்வதை அதிகரிக்கும் பணிகள் குறைவான மட்டத்தில் நிலவிய காரணத்தினால் 8 நிலையங்களுக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 569, 787 மற்றும் 695 ஆகும். சம்பளம் மற்றும் படிகள் உள்ளடங்கலாக மொத்த செயற்பாட்டு செலவினத்தை ஒப்பிடும் போது ஒரு மாணவருக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 686,153, ரூபா 580,691 மற்றும் ரூபா 670,439 எனுமாறு மாணவருக்கான அலகுக் கிரயத்தை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | பாடநெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பணிகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய எதிர்காலத்தில் மாணவர்களுக்கான அலகுக் கிரயத்தை குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | அனைத்து நிலையங்களிலும் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் பணிகளை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | சமுத்திர பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் பட்டப் பாடநெறிகளின் 4-73 எண்ணிக்கையான மாணவர்கள் காணப்பட்ட போதிலும் இரு பாடநெறிகளின் 11 தொகுதிகளின் பரீட்சை பெறுபேறுகளை | பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எடுக்கும் காலத்தை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | பெறுபேறுகளை வெளியிடும் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடுவதற்காக மூன்று மாதங்கள் முதல் 01 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | | |
| (ஏ) | பாணந்துறை பிரதேச மத்திய நிலையத்தில் வாசிகசாலையில் காணப்பட்ட 385 புத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு 2019 ஆகஸ்ட் 11 ஆந் திகதியின் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2020/2021 கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மாணவர்கள் ழூடெநை தொழில்நுட்பம் ஊடாக கற்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் வாசிகசாலையின் புத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்க முடியாதுள்ளமை. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக தொடர்ச்சியாக நாடு மூடப்பட்டிராததுடன் மாணவர்களுக்கு வாசிகசாலையை பயன்படுத்துவதற்கு இடமளிக்க வேண்டும். |
| (ஐ) | நீர்கொழும்பு கல்லூரியின் நீர்வாழ் வளர்ப்பு மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ பாடநெறிக்காக 6 விரிவுரையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போது ஒரு பெண் விரிவுரையாளர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார். பாடநெறியின் பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கு அவர் 2017 ஆம் ஆண்டில் பிரசவ விடுமுறை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்திலிருந்து தற்போது வரையிலும் நிரந்தர விரிவுரையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது அவர் உயர்கல்வி பிரிவின் விரிவுரையாளராக 2018 யூலை முதல் இணைப்புச் செய்வதற்கு கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2016 தொகுதியின் கல்விப் பணிகள் மிகவும் சிக்கல்களின் மத்தியில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவ்வவ்போது வழங்கப்பட்ட விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் நிறைவு செய்யப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளையும் முடிவுறுத்துவதற்கு பணிகள் திட்டமிடப்பட்டுள்ளமை. | மத்திய நிலையத்தின் பணிப்பாளர்களின் கோரிக்கை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்திய பாடநெறிகளை உரிய முறையில் நடாத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | தனியார் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வள்ளங்களை பயன்படுத்துவதற்கு சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான நீர்கொழும்பு கல்லூரியில் இறங்குதுறையின் பயன்படுத்துவதற்கு பதிலாக ஒரு வளத்திற்கு ரூபா 10,000 படி பல்கலைக்கழகம் அறவிடுகின்றமையால் | பதில் வழங்கப்படவில்லை. | எல்லைகள் வரையறுக்கப்பட்டு இனங்காணப்பட்டு வருமானத்தை உரிய முறையில் ஈட்டுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ஈட்டுவதற்காக பயன்படுத்தக்கூடிய இந்த வள்ளங்களை வெளிவாரித் தரப்பினரிடமிருந்து பாதுகாப்பதற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தினால் எல்லைகள் ஒதுக்கப்பட்டு பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஓ) | SSDP செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நீர்கொழும்பு கல்லூரி நடாத்திச் செல்லப்படும் பழைய கட்டிடத்தின் காச்சியிணைக்கும் வேலைத்தளத்தை நடாத்திச் செல்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த அறை டயில் பதிக்கப்படாமை மற்றும் கூரையானது Open Area வில் நனையும் பகுதிகள் 2014 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் ஒழுங்கமைக்கப்படாத காரணத்தினால் பணிமனையை ஆரம்பிப்பதற்கு மற்றும் பாடநெறியை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தது. | SSDP செயற்திட்டத்தின் கீழ் புதிய கட்டிடத்தின் காய்ச்சி இணைக்கும் இடமொன்று இல்லாதிருந்ததுடன் பழைய கட்டிடத்தின் காய்ச்சி இணைக்கும் வேலைத்தளமொன்றை நவீனமயப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறவில்லை என்பது. | கேள்வி நிலவும் பாடநெறிகளை உரிய முறையில் நடாத்திச் செல்ல அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | நீர்கொழும்பு பிரதேச மத்திய நிலையத்தில் கணனி ஆய்வுகூடத்திற்காக இடமொன்று ஒதுக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு முதல் 10 கணனிகள் அவ்வவ்போது கோரப்பட்டிருந்த போதிலும் மாணவர்களின் பாடநெறிகளை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>கணனி கூடத்தில் பௌதீக பரிசோதனையில் 2016 ஆம் ஆண்டில் SSDP செயற்திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்த 10 கணனி மேசைகள் மற்றும் 10 | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | பாடநெறிகளை முறையாக நடாத்திச் செல்வதற்கு உரிய உபகரணங்களை வழங்கி பாடநெறிகளின் தரத்தினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கதிரைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்ற வைக்கப்பட்டிருந்தன. | | |
| (க) | நீர்கொழும்பு மத்திய நிலையத்தில் நடாத்திச் செல்லப்படும் out board motor mechanic பாடநெறிக்காக 06 விரிவுரையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது ஒரு வெளிவாரி விரிவுரையாளரின் பங்குபற்றலுடன் பாடநெறி நடாத்திச் செல்லப்படுகின்றது. இவ் விரிவுரையாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் பாடநெறியை நடாத்த முடியாதிருந்தமையால் பாடநெறியை நிறைவு செய்வதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமை மற்றும் பாடநெறியின் தரம் குறைவடைவதற்கு நேரடியாக தாக்கமளிக்க கூடும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசிய பதவியணியை இணைத்துக் கொண்டு பாடநெறியை உரிய முறையில் நடாத்திச் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பு கல்லூரிக்குச் சொந்தமான இறங்குதுறையில் நங்கூரமிட்டுள்ள இரு வள்ளங்கள் 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் வள்ளங்களை காவல் காப்பதற்காக கல்லூரியின் இரு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு காவல் சேவை பணிகளுக்கு ஒரு வருடத்திற்கு ரூபா 200,000 இற்கு மேற்பட்ட செலுத்தப்பட்டிருந்தது. | நன்கொடையொன்றாக கிடைத்திருந்த இந்த வள்ளங்களின் ஏற்பாட்டிற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டவாறு உள்ளதுடன் இவ்வள்ளங்கள் தொடர்பில் வள்ளங்களை மூடுவதற்கு பொருத்தமான பரிசோதனைகளை மேற்கொண்டு பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கு வரிசை அமைச்சின் செயலாளரினால் இலங்கை கடற்படையின் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் வகையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை. | 2004 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த வள்ளங்கள் தற்போது வரையிலும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும். அவ்வள்ளங்கள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு உரியவாறு பாடவிதானங்களின் கீழ் ஈடுபடுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். |
| (ஆ) SSDP செயற்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்ட நீர்கொழும்பு கல்லூரி நடாத்திச் செல்லப்படும் பழைய கட்டிடத்தில் பொருத்தி இணைக்கும் வேலைத்தளமொன்றை நடாத்திச் செல்வதற்காக 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த அறையில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்த செய்யாத காரணத்தினால் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் வேலைத்தளங்கள் மற்றும் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தமையால் அப்பாடநெறிகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1,595,745 கிரயமான 18 பொருத்தி இணைக்கும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | இந்த உபகரணங்களின் ஒரு பகுதி தற்போது பாடநெறிகளை நடாத்திச் செல்லப்படும் பல்கலைக்கழகங்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளமை. | அரச நிதியத்தை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்கள் மாணவர்களின் கற்றல் பணிகளுக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.4 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பாணந்துறை நிலையத்தின் பொறுப்பில் காணப்படும் 2019 திசெம்பர் 02 ஆந் திகதியில் உள்ளபடியான 89Km ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிசான் சனி மோட்டார் காரின் என்ஜின் பழுதுபார்த்தலுக்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 141,950 ஆன மதிப்பீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி வரையிலும் 2 வருடங்களக்கு மேற்பட்ட காலமாக பழுதுபார்க்கப்படாது மத்திய நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த வாகனத்தை கைதவரிப்பு செய்வதற்கு தீர்மானித்துள்ளமையால் பழுதுபார்த்தல்கள் விளைவற்றது என்பதாலும் குறித்த கராஜிலிருந்து மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளமை. | தீர்மானங்களை நடைமுறைப் படுத்தல் தாமதமடைந்த காரணத்தினால் வாகனங்கள் இற்றுப்போனவாறு உள்ளமையால் அந்த தீர்மானங்களை நடைமுறைப் படுத்தாத உத்தியோகத்தர் கள் தொடர்பில் முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேலுமொரு மோட்டார் வாகனத்தின் மிதிப்பு மற்றும் திறன் கட்டமைப்பு மற்றும் வளிச்சீராக்கல் கட்டமைப்பு செயலிழந்துள்ள காரணத்தினால் 2021 நவம்பர் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.<br><br>வாகன பழுதுபார்த்தலை தாமதமின்றி மேற்கொள்ளாத காரணத்தினால் ஓட்டத்திலிருந்து நிறுத்தப்பட்ட வாகனம் உயிர்ப்பிக்கப்படாது நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் வாகனங்களின் என்ஜின் உள்ளடங்கலாக ஏனைய பகுதிகள் செயலிழந்த நிலைக்கு உள்ளாகி சுழற்சி ஆயுள்காலம் குறைவடைவதுடன் வாகனத்தை குறைந்த பயன்பாட்டுடன் கைதவிர்ப்பதற்கு நேரும். | பிரதேசத்தின் 03 பதிவு செய்யப்பட்ட கராஜ்களின் கூறுவிலைகளைப் பெற்று ஆகக்குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தமையால் கராஜிலிருந்து வாகனத்தை விடுவிக்க முடியாதிருந்தமை. | வாகன நிர்வாக பணிகள் மிகவும் நலிவான நிலையில் காணப்படுகின்ற மையால் இது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |